கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාතර්මේන්තුව, උතුරු පළාත්සභාව
**Department of Co-operative Development, Northern Provincial Council**
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය.
Elders' Home Complex, Kandy Road, Kaithady, Jaffna.

My No:- NP/15/04/02/CCD/CI/2022 Date:-2022.11.04

சுற்றறிக்கை இல – 02/2022

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

**1972ம் ஆண்டின் 05ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58ம் பிரிவின் கீழ் ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகள் தொடர்பில் நியமிக்கப்படும் நடுத்தீர்ப்பாளர்களது தகைமைகளும் அவர்களுக்கான கொடுப்பனவுகளும்**

தங்கள் பிரிவில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படும் பிணக்குகள் தொடர்பாக ஆற்றுப்படுத்தப்படும் நடுத்தீர்ப்பு விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் அவ்விசாரணையின் உள்ளடக்கங்கள் தவிர்ந்த நடுத்தீர்ப்பாளரின் நடவடிக்கை மற்றும் விசாரணை நடைமுறைகளில் ஏற்படக்கூடிய பல்வேறு ஒழுங்கீனங்களைத் தவிர்க்கும் வகையில் கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**1. பிணக்குத் தொகையும் கொடுப்பனவுகளும்**

1.1 பொதுப்பிணக்குகள்:

பொதுப்பிணக்குகள் தொடர்பில் கீழ் காட்டப்பட்டவாறான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வகையில் சங்கங்களில் இருந்து நடுத்தீர்ப்பு நடவடிக்கைக்கான கொடுப்பனவுத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

| தொ. இல | பிணக்குக்கு ஆற்றுப்படுத்தப்படும் தொகை (ரூபா) | நடுத்தீர்ப்பாளரிற்கு வழங்கக் கூடிய கொடுப்பனவு | தபால் மற்றும் காதிதாதி செலவு கொடுப்பனவு |
|---|---|---|---|
| 01 | 25,000.00 வரை | ரூபா 3,000.00 | ரூபா 2,700.00 |
| 02 | 25,001.00 – 50,000.00 வரை | ரூபா 5,000.00 | ரூபா 2,700.00 |
| 03 | 50,001.00 – 100,000.00 வரை | ரூபா 6,000.00 | ரூபா 2,700.00 |
| 04 | 100,001.00 – 500,000.00 வரை | ரூபா 9,000.00 | ரூபா 2,700.00 |
| 05 | 500,001.00 – 1,000,000.00 வரை | ரூபா 13,500.00 | ரூபா 2,700.00 |
| 06 | 1,000,001.00 – 2,000,000.00 வரை | ரூபா 20,000.00 | ரூபா 2,700.00 |
| 07 | 2,000,001.00 – 3,000,000.00 வரை | ரூபா 30,000.00 | ரூபா 2,700.00 |
| 08 | 3,000,001.00 – 4,000,000.00 வரை | ரூபா 40,000.00 | ரூபா 2,700.00 |
| 09 | 4,000,001.00 – 5,000,000.00 வரை | ரூபா 50,000.00 | ரூபா 2,700.00 |
| 10 | 5,000,001.00 ற்கு மேல் | ரூபா 60,000.00 | ரூபா 2,700.00 |

ஆணையாளர் / කොමසාරිස් / Commissioner 021 205 7063
உதவி ஆணையாளர் / සහකාර කොමසාරිස් / Asst. Commissioner 021 227 1418
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant 021 223 2212
பொது / පොදු / Gen 021 205 7064
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7062
E- Mail: - ccdnp@mail.com
Web: - np.gov.lk

1.2 கடன் பிணக்கு :

| தொ. இல | பிணக்குக்கு ஆற்றுப்படுத்தப்படும் தொகை (ரூபா) | நடுத்தீர்ப்பாளரிற்கு வழங்கக்கூடிய கொடுப்பனவு | தபால் மற்றும் காதிதாதி செலவு கொடுப்பனவு |
|---|---|---|---|
| 01 | 20,000.00 வரை | ரூபா 1,500.00 | ரூபா 1,500.00 |
| 02 | 20,001.00 – 50,000.00 வரை | ரூபா 2,500.00 | ரூபா 1,500.00 |
| 03 | 50,001.00 – 100,000.00 வரை | ரூபா 3,000.00 | ரூபா 1,500.00 |
| 04 | 100,001.00 – 250,000.00 வரை | ரூபா 5,000.00 | ரூபா 1,500.00 |
| 05 | 250,001.00 – 500,000.00 வரை | ரூபா 7,000.00 | ரூபா 1,500.00 |
| 06 | 500,001.00 இற்கு மேல் | ரூபா 8,000.00 | ரூபா 1,500.00 |

1.3 மேலே குறிப்பிடப்பட்ட தொகைகள் நடுத்தீர்ப்புக் கட்டணமாக திறத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் போது அவற்றிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன், இதற்காக காசேடும் பேரேடும் பேணப்படுதல் வேண்டும்.

## 2. இணைந்த படியும் பிரயாணப் படியும்

பொதுப்பிணக்கு தொடர்பில் அந்தந்த மாவட்டத்தில் தேவைப்படுத்தப்பட்ட தகைமையுடைய நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்க முடியாதவிடத்து, வெளிமாவட்டத்திலிருந்து நடுத்தீர்ப்பாளர்கள் நியமனம் செய்யப்படும் போது, அவர்களுக்கு நடுத்தீர்ப்பு மற்றும் காகிதாதிக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக ஆகக்கூடியது ஐந்து நாட்களுக்கு இணைந்த படியுடன், பொதுப்போக்குவரத்துப் படியினையும் வழங்க முடியும்

## 3. பிணக்குத்தொகைகளும் நடுத்தீர்ப்பாளர்களுக்கான தகைமைகளும்

### 3.1 பொதுப்பிணக்கு

| தெ. இல | பிணக்கிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தொகை (ரூபா) | தகைமைகள் |
|---|---|---|
| 01 | 25,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIIஐ சேர்ந்த 5 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் |
| 02 | 25,001.00 – 50,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III ல் 08 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 03 | 50,001.00 – 100,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II ஐ சேர்ந்த உத்தியோகத்தர்கள் |
| 04 | 100,001.00 – 500,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II ல் 03 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 05 | 500,001.00 – 1,000,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II ல் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |

ஆணையாளர் / කොමසාරිස් / Commisioner 02 1 205 7063
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant 021 223 2212
தொலைநகல் / ෆැක්ස් / fax 021 205 7062
பொது / පොදු / Gen 021 205 7064
E- mail: - ccdnp@mail.com

| | | |
|---|---|---|
| 06 | 1,000,001.00 – 2,000,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II ல் 08 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 07 | 2,000,001.00 – 3,000,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I ல் 03 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 08 | 3,000,001.00 – 4,000,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I ல் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 09 | 4,000,001.00 – 5,000,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I ல் 08 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் |
| 10 | 5,000,001.00 ற்கு மேல் | மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், அல்லது பதிவாளரால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள். |

### 3.2 கடன் பிணக்கு :

| தொ .இல | பிணக்குக்கு ஆற்றுப்படுத்தப்படும் தொகை (ரூபா) | தகைமைகள் |
|---|---|---|
| 01 | 20,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIIஐ சேர்ந்த 5 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் |
| 02 | 20,001.00 – 50,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஐ சேர்ந்த உத்தியோகத்தர்கள் |
| 03 | 50,001.00 – 100,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஐ சேர்ந்த 3 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் |
| 04 | 100,001.00 – 250,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஐ சேர்ந்த 5 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் |
| 05 | 250,001.00 – 500,000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஐ சேர்ந்த 8 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் |
| 06 | 500,001 ற்கு மேல் | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் Iஐ சேர்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது பதிவாளரால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள். |

## 4. நடுத்தீர்ப்பாளர் நியமனம்

4.1 நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும் போது அல்லது நியமனத்திற்காக சிபார்சு செய்யும் போது அவர்களது தனிப்பட்ட விசாரணை செய்யும் திறமை, விசாரணையில் நேர்மை, விசாரணை தொடர்பான காண்புகளை வெளிக்கொணரும் ஆற்றல், கடந்த கால தீர்ப்புக்களின் பக்கசார்பற்ற தன்மை என்பன குறித்து கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஆணையாளர் / කොමසාරිස් / Commisioner 02 1 205 7063
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant 021 223 2212
தொலைநகல் / ෆැක්ස් / fax 021 205 7062
பொது / පොදු / Gen 021 205 7064
E- mail: - ccdnp@mail.com

4.2 நடுத்தீர்ப்பாளர்களாக குறித்த தகைமையையுடைய சேவையிலுள்ள உத்தியோகத்தர்களையோ, அல்லது குறித்த தமைமைகளைக் கொண்டுள்ள போது இளைப்பாறிய உத்தியோகத்தர்களையோ, நியமிக்கவோ அல்லது நியமனத்திற்காக சிபார்சு செய்யவோ முடியும்.

4.3 ரூபா 100,000.00 வரையான பிணக்குகளுக்கு தங்களால் குறித்த தகைமையுடையவர்களை நடுத்தீர்ப்பாளர்களாக நியமித்துக்கொள்ள முடியும். ரூபா 100,000.00ற்கு மேற்பட்ட பிணக்குகளுக்கு எனது அனுமதிக்கு அமையவே நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்க முடியும்.

4.4 நடுத்தீர்ப்பாளராக நியமிக்கப்படும் உத்தியோகத்தர் அல்லது நியமனத்திற்காக சிபார்சு செய்யப்படும் உத்தியோகத்தர் குறித்த சங்கத்தின் பிணக்கு ஏற்பட்ட காலப்பகுதியில் அச்சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றியிராதிருப்பதனையும், அச்சங்கத்தின் வேறு எந்த நலன்களிலும் தொடர்பு அற்றவராக இருப்பதனையும், தாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் (உதாரணம்: குறித்த சங்கத்தில் அங்கத்தவராக இருத்தல் ஒரு தகைமையீனம்).

4.5 நடுத்தீர்ப்பு விசாரணைக்களுக்காக கோவைகள் கையளிக்கப்பட்டு உரிய வகையில் விசாரணை மேற்கொண்டு உரிய காலப்பகுதிக்குள் கோவைகளைக் கையளிக்காத உத்தியோகத்தர்களை நடுத்தீர்ப்பாளராக நியமனம் செய்தலாகாது.

## 5. நடுத்தீர்ப்பு நடவடிக்கையை முடிவுறுத்தல்

5.1 பிணக்குகள் தொடர்பில் நடுத்தீர்ப்பாளராக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் நியமனத்திகதியில் இருந்து மூன்று மாத காலத்தினுள் பிணக்கினை விசாரணை செய்து தீர்ப்பு வழங்குதல் வேண்டும். விசாரணைக்கான கால நீடிப்பு கோரப்படுமிடத்து அது நியாயமானது எனக்கருதப்பட்டால் கால நீடிப்பு வழங்கப்படலாம்.

5.2 நடுத்தீர்ப்பாளர் ஒருவரினால் விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் போது அவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு சகல இணைப்புக்களும் உள்ளமையை உறுதிப்படுத்திய பின்னரே அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

இச்சுற்றுநிருபம் 10.11.2022 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன் அத்திகதியிலிருந்து ஏற்கனவே நடைமுறையிலுள்ள எனது 1 / 2018 ம் இலக்க 31.01.2018 ம் திகதிய சுற்று நிருபம் இத்தால் இரத்து செய்யப்படுகின்றது.

தேவந்தினி பாபு,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதி – பணிப்பாளர், மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவகம், வவுனியா - தகவலுக்காக

ஆணையாளர் / කොමසාරිස් / Commisioner – 02 1 205 7063
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant – 021 223 2212
தொலைநகல் / ෆැක්ස් / fax – 021 205 7062
பொது / පොදු / Gen – 021 205 7064
E- mail: - ccdnp@mail.com